செ.கு.எண் : 138

நாள் : 09-04-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 9.4.2012

கிருஷ்ணகிரி மாவட்டம், நாகரசம்பட்டி காவல் நிலையத்தில், முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. கு.காமராஜ் அவர்கள் 2.4.2012 அன்று ஊத்தங்கரை அருகே தேசிய நெடுஞ்சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 6.4.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சீனிவாசன் அவர்கள் 30.3.2012 அன்று பணி முடிந்து வீட்டிற்கு திரும்பும் போது கூத்தாண்ட குப்பம் கிராமம் அருகில், நாட்ராம்பள்ளி – ஜோலார்பேட்டை பிரதான சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 7.4.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

முதல் நிலைக் காவலர் திரு. காமராஜ் மற்றும் தலைமைக் காவலர் திரு. சீனிவாசன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்துகளில் காலமான முதல் நிலைக் காவலர் திரு. காமராஜ் மற்றும் தலைமைக் காவலர் திரு. சீனிவாசன் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை-9**